**இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை – 2017**

---

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு என்பற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நிதியத்தின் தலைவருக்கு 2018 செப்தெம்பர் 19 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஏனைய பொறுப்புக்களின் கீழ் அட்டுறு ஊக்குவிப்பாகக் காட்டப்பட்ட ரூபா 1,797,389 தொடர்புடைய செலுத்தவேண்டிய நபர்களின் பெயரில் உள்ளடங்கிய விபரங்கள் கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்படவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

1996 இன் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 15(2) பிரிவின் படி, ஏதேனும் பங்களிப்பாளர் அவர்க்கு வழங்கப்பட்ட கொள்கைகளின் கீழ் பயன்களினை இழக்கின்ற வேளையில், அது நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிப்பு ஒன்றினை அவ்வாறான பங்காளிப்பார்க்கு சபை விநியோகிக்கும். எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 யூலை வரை செயலற்ற பங்களிப்பாளர்கள் இனங்காண முடியாதிருந்தமையினால், அது தொடர்பாக அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான் ரூபா 705,269 பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 7,714,628 பற்றாக்குறையொன்றினை விளைத்திருந்தமையினால், ரூபா 7,009,359 இனால் நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 5,156,806 இனால் அதிகரித்தமை மற்றும் வாகன குத்தகைச் செலவினம் ரூபா 2,928,667 இனால் அதிகரித்தமை மேற்குறித்த பற்றாக்குறைக்கு காரணமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதிசார் மிகைகள் காணப்பட்டது. இருப்பினும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,596,828 மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 705,269 பற்றாக்குறையொன்றிக்கு அது மீண்டும் மாற்றப்பட்டது. 2017 இன் நிதிசார் விளைவு மேலும் ரூபா 7,714,628 இற்கு பற்றாக்குறையாக்கக் காணப்பட்டது.

எவ்வாறாயினும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சரிபடுத்திய பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 69,679,613 ஆகக் காணப்பட்ட சபையின் பங்களிப்பு 2015 வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்ததுடன் அது மீண்டும் 2016 ஆம் ஆண்டில் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் 2017 இல் ரூபா 77,844,967 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

**கூட்டிணைந்த திட்டம்**

அதிகாரசபையினால் 2014 தொடக்கம் 2016 வரையான ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் இனங்காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் மட்டுப்படுத்தல்கள் 2017 - 2019 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினுள் இது வரை உள்ளடக்கப்பட்டிருந்தமையினால், அதிகாரசபையினால் கடந்த 04 வருடங்களில் அந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2016 திசெம்பர் 29 இல் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை அதிகாரசபை எடுத்திருந்தது. 08 பிரதான செயற்பாடுகளும் 34 உப செயற்பாடுகளும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டது. இந்த செயற்பாடுகளுக்கு பிரதான குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பின்வரும் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) மீளாய்வாண்டின் போது 50 சதவீதத்தினால் ஓய்வூதியங்களின் மொத்தப் பங்களிப்பாளர்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தினை அதிகரிப்பதற்கு 50,000 பங்களிப்பாளர்களினை பதிவு செய்வது பிரதான இலக்காகக் காணப்பட்ட போதிலும் செயற்படு நிலையிலுள்ள பங்களிப்பாளர்கள் மற்றும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஓய்வூதியங்களுக்கு உரிமையுடைய பங்களிப்பாளர்களின் எண்ணிக்கையினை இனங்காண முடியாதிருந்தது.

(ii) அரசியல் முகவர்கள், வெளிநாட்டு ஊழியர்கள், தோட்ட தொழிலாளர்கள் மற்றும் அரச துணை பயனாளிகளினூடாக சமூகப் பாதுகாப்பு திட்டமொன்றை அமுல்படுத்த திணைக்களங்கள் மற்றும் அரச நியதிச்சட்ட நிறுவகங்களின் ஒத்துழைப்புடன் இரண்டு குழுக்கள் இனங்காணப்பட்டன.

(iii) மீளாய்வாண்டின் போது 05 சமூக சேவைகள் திட்டங்களினை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல்.

(iv) நாட்டில் சமூக பாதுகாப்பு திட்டத்தினை விரிவாக்குதல் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டத்தினுள் அதிக பங்களிப்பாளர்களினைப் பதிவு செய்தல் போன்ற நோக்கங்களுடன் சமூக பாதுகாப்பு திட்டத்தின் பங்களிப்பாளர்களின் அறிவினை மேம்படுத்த பிரசித்தப்படுத்த மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகளினை விரிவாக்குவதற்கு ஊடக பிரிவினை ஸ்தாபித்தல்.

(v) அரச மற்றும் தனியார் வங்கிகளினூடாக ஓய்வூதியதாரர்களுக்கு வினைத்திறன்மிக்க செலுத்துகை திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு, திறக்கப்பட்ட 20,000 வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டின் போது 10,000 கணக்குகளுக்குச் சமமான 50 சதவீத கணக்குகளினை திறத்தல்.

**(ஆ) சமூகப் பாதுகாப்பு திட்டத்திற்கான பங்களிப்பாளர் பதிவு, உறுதிப்பத்திரங்களின் விநியோகம் மற்றும் செயலாற்றவைகள்.**

---

(i) 2017 ஆம் ஆண்டில் ‘சுரக்குமா’ (Surahuma) மற்றும் ‘அரஸவ்வ’ (Arassawa) ஆகிய 02 சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கு 63,141 பங்களிப்பாளர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அதில், ‘சுரக்குமா’ திட்டத்திற்கு 8,164 பங்களிப்பாளர்களும் ‘அரஸவ்வ’ திட்டத்திற்கு 54,977 பங்களிப்பாளர்களும் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்தினால் பதிவு குறைவடைந்து காணப்பட்டது.

(ii) 63,141 புதிய பங்களிப்பாளர்கள் பதிவுசெய்யப்பட்ட போதிலும். அவற்றில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 15,759 இற்குச் சமமான 24 சதவீத பங்களிப்பாளர்களுக்கு உறுதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. சபையின் மொத்த ஊழியர்களில் 70 சதவீத ஊழியர்கள் சமூக பாதுபாப்பு பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் அதிதாழ்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் ஓய்வூதிய திட்டங்களுக்கு பதிவுசெய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 628,786 எனக் குறிப்பிடப்பட்ட போதிலும், அதில், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 288,234 ஆக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முறைமையின் பலவீனம் காணரமாக, 2015 சனவரி தொடக்கம் 2018 செப்தம்பர் வரையான செயற்பாடற்றவர்களினை சபையினால் இனங்காண முடியாதிருந்ததுடன் செயற்பாடற்றவர்களின் வருடாந்த அதிகரிப்பில் போக்கொன்று காணப்பட்டிருந்தது. ஆனால் அந்த திட்டத்தினுள் பங்களிப்பாளர்களினை வைத்திருப்பதற்கு சபையினால் இழிந்தளவான மட்டமொன்றில் கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2017 ஆம் ஆண்டில் பங்களிப்பாளர்களின் மொத்த பெறுகை ரூபா 196,961,410 தொகையாகக் காணப்பட்டதுடன் பங்களிப்பாளர்களுக்கான மொத்தச் செலுத்துகைகள் ரூபா 306,232,747 தொகையாகக் காணப்பட்டது. 2017 திசெம்பர் 31 அளவில் ஓய்வூதிய நிதியத்தின் மீதி ரூபா 2,178,568,478 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்தத் திகதியில் உள்ளவாறான சபையின் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,988,549,227 தொகையாகக் காணப்பட்டது. கடந்த ஆண்டுகளின் தகவல்களினைப் பகுப்பாய்கையில், ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்பின் பெறுகையில் குறைவடைவும் ஓய்வூதிய செலுத்துகைச் செலவினத்தில் அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டது.

(v) மீளாய்வாண்டில் 1979 பங்களிப்பாளர்களுக்கான அங்கத்துவத்தினை இரத்துச்செய்தல் மற்றும் பங்களிப்புக்களின் மீள்செலுத்துகை ரூபா 38,055,553 ஆகக் காணப்பட்டிருந்தது. ஆகையினால், பாரிய எண்ணிக்கையில் அங்கத்துவத்தினைப் ரத்துச்செய்யும் மற்றும் பணத்தினை மீளப்பெறும் போக்கொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் பங்களிப்பாளர்களினை தக்கவைத்துக் கொள்வதற்கான முறைமையொன்றை சபை பின்பற்றியிருக்கவில்லை.

(vi) சபையினால் பங்களிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச்செய்யும் போது பணத்தை சேகரிப்பதற்கு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பெறுகைப் புத்தகங்கள் பயன்படுத்திய பின்னர் களஞ்சியத்திற்கு திருப்பியனுப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 16 மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்ட 1,685 பெறுகைப் புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் மீளாய்வாண்டின் போது புதிய புத்தகங்களினை சேகரிக்கும் வேளையில் அப் புத்தகங்கள் களஞ்சியத்திற்கு திருப்பியனுப்பப்பட்டிருக்கவில்லை.

**(இ) சட்டத்திலுள்ள நோக்கங்களினை அடைந்துகொள்ளத் தவறியமைகள்**

1999 இன் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு சபை (திருத்தச்) சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பின்வரும் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது சபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) சுயஊழியர்களினை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறன்களினை முன்னேற்றுதல்.

(ii) சுய வேலைவாய்ப்புக்களுக்கு இள மக்களினை ஊக்கமளித்தல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறன்களினை முன்னேற்றுதல்.

(iii) வளமுகாமைத்துவம் மற்றும் சிக்கனத்தின் பலன்கள் தொடர்பில் சுய ஊழியர்களினை விழிப்பூட்டல்.

(iv) சுயஊழியர்களின் வாழ்வாதார நிலைமையினை முன்னேற்றுதல்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வூதிய நிதியிலிருந்து ரூபா 23,947,068 தொகையொன்றை சபை செலவழித்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்ட கணனி முறைமையொன்றில் பழைய மற்றும் புதிய கணனி முறைமைகள் இரண்டையும் ஒரே சமயத்தில் செயற்படுத்தியமை, தர உட்படுத்தலில் மோசடிகளினை தவிர்ப்பதன் மீதான கட்டுப்பாட்டில் பாதுகாப்பின் குறைபாடு மற்றும் தரவு உட்புகுத்தல் வசதிகளின் குறைபாடுகள் காரணமாக பங்களிப்பாளர்கள் தொடர்பான தகவல்களினைப் பெற்றுக் கொள்ளத் தவறியமை, அறிக்கைகளினைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் போன்ற பலவீனங்கள் காணப்பட்டன.

இந்த அனைத்து குறைபாடுகளினையும் நிவர்த்தி செய்வதற்கு புதிய முறைமை ஸ்தாபிக்கப்படுமென சபை அறிவித்திருந்தது. ஆனால் 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் அது அமுல்ப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து பிரதேச செயலக உத்தியோகத்தகர்களினூடாக பங்களிப்பாளர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் தவணைப்பணங்களின் சேகரிப்புக்கு பங்களிப்புச் செய்த உத்தியோகத்தகர்களுக்கான ஊக்குவிப்புப்படியாக ரூபா 1,797,389 தொகையொன்று பொறுப்பாகக் காணப்பட்டது.

(இ) 2004 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான கடந்த 13 ஆண்டுகளில் சபையின் பங்களிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த சேகரிப்புக்களில் ரூபா 1,270,485 தொகையொன்று, 2015 ஆம் ஆண்டில் கணனி முறைமையின் செயற்பாடற்ற நிலைமை காரணமாக தற்போது பங்களிப்பாளர்களினை இனங்காண முடியாதிருந்தமையினால் இனங்காணப்படாத வைப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தது. வங்கியில் பங்களிப்புப் பணம் வைப்புச் செய்யப்படுகின்றவேளை அறிவிப்பதற்கு பங்களிப்பாளர்கள் மற்றும் வங்கிகள் நடவடிக்கை எடுத்திராததன் காரணமாக, மீளாய்வாண்டில் ரூபா 7,793,825 தொகையொன்று உள்ளடங்களாக ரூபா 9,064,310 கூட்டுத்தொகையான தொகையொன்று இனங்காணப்படாத வைப்புக்களாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 25 மாவட்ட செயலக அலுவலகங்களில் 44 ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் 19 முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆட்சேர்ப்புக்கள் தொடர்பான கிராம சேவையாளர் செயற்பாடுகள், மேம்படுத்தல் செயற்பாடுகளினைக் கையாளுதல், தாமதங்களின்றி சபைக்கு சேகரிக்கப்பட்ட பங்களிப்புக்களினை அனுப்புதல் மற்றும் சேகரிக்கப்பட்ட தவணைப்பணங்களினை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை ஒருங்கிணைப்பு உத்தியோத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய போதிலும், ஆனால் அந்த உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுடன் நேரடியாக ஈடுபட்டிருந்தமை காரணமாக செயலாற்றல் தாழ்ந்த மட்டமொன்றில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. அத்துடன் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு சபை முகாமைத்துவத்தினால் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் பெறுகைத் திட்டத்திலிருந்து ரூபா 5,600,000 தொகையொன்றும் முன்னைய ஆண்டு மூலதன மானியத்திலிருந்து ரூபா 2,550,946 தொகையொன்றும் உள்ளடங்களாக ரூபா 8,150,946 கூட்டுத்தொகையுடைய தொகையொன்று சமூக ஓய்வூதிய திட்டத்திற்கான மென்பொருள் முறைமையொன்றினை கொள்வனவு செய்வதற்கு பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறுகை வேலைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் பெறுகை செயற்பாடுகளிலுள்ள விநியோகத்தரொருவரினை தெரிவு செய்தல் மாத்திரம் 2018 யூலை 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் இரண்டரை வருடங்கள் செலவிடப்பட்டது. ஆனால் இது வரை கணனி முறைமையைக் கொள்வனவு செய்ய முடியாதிருந்தமையினால் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய நிதியத்தின் செயற்பாடுகளினை முறையாக முன்னெடுக்க முடியாதிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்.

2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவகங்களும் செயற்படல் வேண்டும். மீளாய்வாண்டு தொடர்பில் அவர்களின் பரப்பெல்லையின் கீழ் காணப்படும் செயற்பாடுகள் தொடர்பில் அளவிடைகளினை எவ்வாறு மேற்கொள்ளவதென இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை

பெறுகை வழிகாட்டல்களின் 4.2.1 இல் குறித்துரைக்கப்பட்ட வடிவத்துடன் இணங்கியிராது பெறுகைத் திட்டமொன்றினை சபை தயாரித்திருந்த போதிலும், மேலும் காலக்கிரமமான கட்டளையினைப் பின்பற்றியிருக்காததுடன் சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகளாக வேலைகள் பிரிக்கப்பட்டிருக்காததுடன் திட்டம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையின் காரணமாக திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 7,530,000 மொத்த மூலதன மானியத்தில் 75.54 சதவீதத்திற்குச் சமமான ரூபா 5,537,663 தொகையொன்று ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 35 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது ஒரு வினைத்திறன் வாய்ந்த முகாமைத்தவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் | |
|---|---|---|---|
| (அ) | பங்களிப்புக்களின் முகாமைத்துவம் | (i) | பங்களிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்கையில் பத்திரங்களினை விநியோகிப்பதில் கால தாமதம் |
| | | (ii) | உறுதிப்படுத்தப்பட்டுள்ள செயலற்ற பங்களிப்பாளர்களினை அடையாளம் காண்பதற்கு தவறியமை. |
| | | (iii) | வங்கிகளினால் சேகரிக்கப்பட்ட தவணைப் பணங்களினை பதிவுசெய்வதில் பங்களிப்பாளர்களினை இனங்காண்பதற்கு திட்டமான முறைமையொன்று காணப்படாமையினால், 2016 திசெம்பர் 31 வரை ரூபா 9,164,309 தொகையொன்று இனங்காணப்படாத வைப்புக்களாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. |
| (ஆ) | பெறுகைப் புத்தகங்களினை விநியோகித்தல் | | பெறுகைப் புத்தகங்களினை விநியோகிக்க மற்றும் சேகரிக்க திட்டவட்டமான முறைமையினைக் கொண்டிருக்காமை. |
| (இ) | கணனிமயப்படுத்தல் | | சபையின் தேவைப்பாடுகளுடன், தற்போது காணப்படும் கணனி முறைமை பொருத்தியிராமை காரணமாக, ஓய்வூதியங்களினைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியான நபர்களினை முறையாக இனங்காண்பதற்கு தவறியமை. |